**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24–ஆம் நாள் செவ்வாய்கிழமை

**இ.ம.எண்.18/2026 அதன் அ.வ.எண்.227/2010**

1). S.K.முகைதீன் அப்துல் காதர்
2). S.S. முபாராக்
3). அ.முகைதீன் மீரா
4). அ.ஆசியா பீவி
5). K.M.A.முகம்மது யாசீன்
6). கு.ஹமீது பாத்திமாள்
7). P.M.அபுபக்கர்
8). K.M. ஜபருல்லா
9). J.M. இஸ்மத் நிஷா
10). நா.ரம்சான் பசீர்
11). அ. மெஹர்பானு
12). S.K.J.முகம்மது அபுபக்கர்
13). அஸ்மாபீவி
14). ஆரிபா
15). P.A.மீரான் முகைதீன்
16). மு.அபுபக்கர் சித்திக்
17). S.S.ஹயாத்
18). கா.ரம்சான் நூராணி
19). M.P.S.அப்துல் காதர்
20). S.K.சம்சுதீன்
21). சு.ராக்கம்மாள்
22). ப.சங்கரம்மாள்
23). ச.பலவேசத் தேவர்
24). அ.நாச்சியார்
25). ஹிதாய ரசூல் மேற்படியார்களின்
அதிகார பூர்வ முகவரான
பி.எஸ்.இஸ்மத்யுனூன் மூலம்
26). பி.இஸ்மத்யுனூன்

27). வீரபத்திரன்
28). பாலசுப்பிரமணியன் .... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
2 முதல் 6, 9 முதல் 22, 24 முதல்
27, 29, 30, 32, 33

/எதிர்/

1). பிச்சையா
2). த.முத்துப்பாண்டி (இறப்பு)
3). பி.கணபதித் தேவர் (இறப்பு)
4). சந்தண மாரி
5). சுடலை என்ற சிவா (இறப்பு)
6). சண்முகவேல்
7). இசக்கி சங்கர் என்ற மணி
8). பேச்சியம்மாள் (இறப்பு)
9). ராமலெட்சுமி
10). மல்லிகா (எ) சங்கரம்மாள்
11). எஸ்.சண்முகதாய்
12). முத்துலெட்சுமி
13). சுந்தரம்
14). பேச்சிதாய்
15). தங்கவேல்
16). சண்முகத்தாய்
17). இசக்கி என்ற முத்துப்பாண்டி
ஷை இளவரின் பாட்டியும், அடுத்த நண்பருமான
4 ம் எதிர்மனுதாரர்/வாதி சந்தனமாரி மூலம் ....எதிர்மனுதாரர்கள்/வாதிகள்
18). கே.சுப்பிரமணியன்
19). ப.சாகுல் ஹமீது
20). மைனர் குல்ஷன் பேகம்
ஷையாரின் தாயாரும் காப்பாளருமான
கதீஜா மூலமாக
21). சீ.அருணாசலம்
22). சரஸ்வதி ....எதிர்மனுதாரர்கள்/
1, 7, 8, 23, 31 பிரதிவாதிகள்

இந்த மனுவானது 09.03.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.கிருஷ்ணராஜ் அவர்கள் ஆஜராகியும், 1, 4, 6, 7, 9 முதல் 17 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.ஞானியார் அவர்கள் ஆஜராகியும், 2, 3, 5, 8 எதிர்மனுதாரர்கள் இறந்து விட்டனர். 19 முதல் 22 எதிர்மனுதாரர்களை அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பினர்கள் ஆக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் படி பிரிவு 151–ன் படி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டது.

**2). மனுவின் சுருக்கம்**

2.1) அசல் வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு பதில் வாதுரைக்காக 27.01.2026ம் தேதி ஒத்தி வைக்கப்பட்டிருந்தது என்றும், மனுதாரர்கள் தரப்பு பதில் வாதுரைக்காக தயார் செய்யும் பொழுது தான் எதிர்வழக்குரையில் சில சங்கதிகள் குறிப்பாக குறிப்பிட தவறியுள்ள நிலை தெரிய வந்தது என்றும், கடந்த 1961ம் ஆண்டு 3ம் வாதி தபசில் சொத்தை வீரபத்திர தேவாடு விற்பனை செய்து விட்டு, 50 ஆண்டுகள் கழித்து வழக்கை தாக்கல் செய்துள்ளதால், பிராது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டது என்பதையும், 3ம் வாதியின் உடன் பிறந்த சகோதரிகளை வழக்கில் கட்சியாக சேர்க்காமல் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளார் என்பதை 3ம் வாதி குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்ட சங்கதிகளையும் எதிர்வழக்குரையில் தெரிவிக்க தவறி உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

2.2) மேற்படி சங்கதிகளைப் பொறுத்து கூடுதல் எதிர்வழக்கை தாக்கல் செய்ய உள்ளதாகவும், வாதிகள் தரப்பில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம்

தவறு என்றும், பிராது தபசில் சொத்தின் மதிப்பினை நிரூபிக்க சார்பதிவாளர் மேலப்பாளையம் அவர்களை சாட்சியமாக விசாரிக்க வேண்டியும், கூடுதல் எதிர்வழக்குரை மற்றும் சாட்சிகளை விசாரிக்கும் பட்சத்தில் அசல் வழக்கை மறுதிறப்பு செய்யக் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

3**). 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 4, 6, 7, 9 முதல் 17 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம்**

3.1) இம்மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், 2010 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட பிரதான வழக்கில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எழுத்துப்பூர்வமான வாதுரை குறிப்பில் பிரதிவாதிகளின் வாதம் எவ்வகையில் தவறானது என்பதை எடுத்துரைத்த பின்னர் மனுதாரர்கள் தங்களது வழக்கில் உள்ள தவறுகளை சரி செய்யும் விதமாக தாக்கல் செய்திருக்கும் இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என கூறப்பட்டுள்ளது.

3.2) மனுதாரர்கள் பிரதான வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், மனுதாரர்கள் மனுவில் முன்னுக்கு பின் முரணாக தவறான விவரங்களை தெரிவித்துள்ளார்கள் என்றும், மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளை அவர்கள் முன்னர் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சொல்லாததற்கான காரணங்கள் எதையும் மனுவில் தெரிவிக்கவில்லை என்றும், இம்மனு அவசிய தரப்பினரை கட்சி சேர்க்காததால் தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

4). இரு தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5). **<u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர்கள் அசல் வழக்கை மறுதிறப்பு செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

5.2) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கின் 2 முதல் 6, 9 முதல் 22, 24 முதல் 27, 29, 30, 32, 33 பிரதிவாதிகள் ஆவார்கள். இம்மனுவின் 1 முதல் 17 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள் மற்றும் 18 முதல் 22 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கின் 1, 7, 8, 23, 31, 34 பிரதிவாதிகள் ஆவார்கள். அசல் வழக்கானது தபசில் சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரமும், நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமும் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6). அசல் வழக்கில் இரு தரப்பிலும் வாதுரை கேட்ட பின்னர், கடந்த 15.12.2025 ம் தேதி தீர்ப்புரைக்காக ஒத்தி வைக்கப்பட்டு இருந்த போது, 1 முதல் 17 எதிர்மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் வாய்மொழியாக வாதுரை ஏற்கனவே செய்திருந்த போதிலும், தீர்ப்புரைக்காக ஒத்தி வைக்கப்பட்ட பின்னர் எழுத்துப்பூர்வமான வாதுரையை கடந்த 12.12.2025 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டது. அதனால், மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு பதில் வாதுரை செய்வதற்கு 17.12.2025 ம் தேதி முதல் 19.12.2025, 02.01.2026, 05.01.2026, 07.01.2026, 09.01.2026, 20.01.2026, 23.01.2026, 27.01.2026, 29.01.2026, 04.02.2026 ஆகிய தேதிகளில் ஒத்தி வைக்கப்பட்டது. இருந்த போதிலும், மனுதாரர்கள் தரப்பில் எந்தவிதமான பதில் வாதுரையும் செய்யவில்லை. இந்நிலையில், கடந்த 04.02.2026 ம் தேதியன்று இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

7) மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை பரிசீலனை செய்கையில், அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பு பதில் வாதுரைக்காக 27.01.2026 ம் தேதி ஒத்தி வைக்கப்பட்டிருந்தது என்றும், அதனால் மனுதாரர்கள் தரப்பில் பதில் வாதுரை

தயார் செய்யும் போது, எதிர்வழக்குரையில் சில சங்கதிகளை குறிப்பிட தவறியுள்ள விவரம் தெரிய வந்தது என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகளை பரிசீலனை செய்கையில், தீர்ப்புரைக்காக ஒத்தி வைக்கப்பட்டிருந்த போது தான் 1 முதல் 17 எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் எழுத்துப்பூர்வமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டது. அதனால் மீண்டும் மனுதாரர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது. ஏற்கனவே இரு தரப்பிலும் வாதுரை செய்யப்பட்டு விட்டது என்பதை வழக்கு ஆவணங்களை பார்வையிடுகையில் அறிய முடிகிறது.

8) மனுதாரர்கள் தரப்பில் 1961ம் ஆண்டு 3ம் வாதி பிராது தபசில் சொத்தை வீரபத்திர தேவாடுவிற்கு விற்பனை செய்து விட்டு, 50 ஆண்டுகள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே, பிராது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை எதிர்வழக்குரையில் தெரிவிக்கவில்லை என கூறப்பட்டுள்ளது. அசல் வழக்கானது 2010ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு, ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் உள்ளது. அசல் வழக்கில் பதில் வாதுரை தாக்கல் செய்வதற்காக பல்வேறு வாய்தாக்கள் மனுதாரர்களுக்கு வழங்கப்பட்ட பின்னர், இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9) மனுதாரர்கள் தரப்பில், இம்மனுவில் கூறியுள்ள சங்கதிகள் பதில் வாதுரை தாக்கல் செய்வதற்கு பார்த்த போது தான் தெரிய வந்தது என கூறியுள்ளது நம்பும்படியாக இல்லை. ஏற்கனவே, மனுதாரர்கள் தரப்பில் வாதுரை செய்யப்பட்டு, தீர்ப்புரைக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்த போது தான், மீண்டும் எழுத்துப்பூர்வமான வாதுரை எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டது. அதனால் பதில் வாதுரை செய்ய மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டது. அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, 15 ஆண்டுகள் கழித்து கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு அசல் வழக்கை மறுதிறப்பு செய்ய வேண்டுமென கூறியுள்ள

இம்மனுவை அனுமதித்தால், மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கில் முன் வைக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் விடுபட்ட சங்கதிகளை சரி செய்யும் வாய்ப்பானது மனுதாரர்களுக்கு கிடைத்து விடும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்ய வேண்டி அசல் வழக்கை மறுதிறப்பு செய்ய அனுமதித்தால் அசல் வழக்கானது மீண்டும் பழைய நிலைக்கு சென்று முதலில் இருந்து ஆரம்பிக்கும் நிலை ஏற்படும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10) மனுதாரர்கள் தரப்பில், 3ம் வாதியின் உடன் பிறந்த சகோதரிகளை கட்சியாக சேர்க்காமல் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளார்கள் என்பதை 3ம் வாதி தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்ட சங்கதிகளை எதிர்வழக்குரையில் தெரிவிக்க தவறியுள்ளதாக கூறப்பட்டுள்ளது. எதிர்வழக்குரையில் மனுதாரர்கள் சாட்சியத்தில் 3ம் வாதி தனது குறுக்கு விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளை சரி செய்யும் நோக்கத்தில் எதிர்வழக்குரையை திருத்தம் செய்ய முடியாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11) மனுதாரர்கள் தரப்பில் வாதிகள் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றும், வழக்கு தாக்கல் செய்த காலத்தில் அரசு வழிகாட்டி மதிப்பு சதுரடிக்கு 86 என்றும், பிராது தபசில் சொத்தின் மதிப்பு ரூ.56,19,240/– என்பதை நிரூபிக்க சார்பதிவாளர், மேலப்பாளையம் அவர்களை சாட்சியாக விசாரிக்க வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. மனுதாரர்களுக்கு ஏற்கனவே அவர்கள் தரப்பு எதிர்வாதத்தை முன் வைக்கும் வகையில் பல்வேறு வாய்ப்பு வழங்கப்பட்டு விட்டது.

12) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில், மனுதாரர்கள் தரப்பில், அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 15 ஆண்டுகள் கழித்து கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டுமென்றும், மேலும், 3ம் வாதி குறுக்கு

விசாரணையில் ஒத்துக் கொண்டுள்ள சங்கதிகளை எதிர்வழக்குரையில் தெரிவிக்க தவறியுள்ளது பற்றியும், சார்பதிவாளர் அவர்களை விசாரிக்க வேண்டுமென்ற சங்கதியை பற்றியும் பதில் வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்ட போது தான் மனுதாரர்களுக்கு தெரிய வந்தது என்று கூறுவது ஏற்றுக் கொள்ளும் படியாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13) அசல் வழக்கானது 15 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் இருந்து வருவதாகவும், மனுதாரர்களுக்கு பல்வேறு வாய்ப்புகள் வழங்கப்பட்டு விட்டது என்றும், கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டி அசல் வழக்கை மறுதிறப்பு செய்யக் கோரும் இம்மனுவை அனுமதித்தால் மீண்டும் வழக்கானது 15 ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையை எட்டிவிடும். அது மனுதாரர்கள் தரப்பில் விடுபட்ட குறைகளை சரி செய்ய வாய்ப்பு ஏற்படும் என்பதாலும், நீதியின் நலன் கருதி, மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு இம்மனு அனுமதிக்க உகந்ததல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, மனுதாரர்களின் மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் எழுதப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Orders uploded on 24.03.2026.

MARIMUTHU R MUNIYASAMY

Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.03.24 19:28:24 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

1). **மனுதார் தரப்பு சாட்சிகள் பட்டியல்** – இல்லை
2). **மனுதார் தரப்பு சான்றாவணங்கள் பட்டியல்** – இல்லை
3). **எதிர்மனுதார் தரப்பு சாட்சிகள் பட்டியல்** – இல்லை
4). **எதிர்மனுதார் தரப்பு சான்றாவணங்கள் பட்டியல்** – இல்லை.

Orders uploded on 24.03.2026.
MARIMUTHU R MUNIYASAMY
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.03.24 19:28:31 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

முு.மா.உ.நீ., திருநெல்வேலி
இ.ம.எண்.18/2026
இன்
அ.வ.எண்.227/2010
24.03.2026.
வரைவு/ நேரிய உத்தரவு